
Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication

மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) லிமிடெட்,

[அரசாணை (டி) எண் 204, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ1)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/563/2025.—மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும் நேதாஜி டிரான்ஸ்போர்ட் ஓர்க்கர்ஸ் யூனியனின் தொழிற்சங்க உறுப்பினரான திரு. கு லெனின், நடத்துநருக்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கையை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்,

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு. இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன், சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினாக்கள்

கோரிக்கை எண்: 1

திரு. கு.லெனின், நடத்துநர் (ப.எண் 54360) என்பவரின் 05/2020. 06/2020 மற்றும் 07/2020 ஆகிய மாதங்களில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தற்செயல் விடுப்புகள் 05 நாட்கள் மற்றும் மருத்துவ விடுப்புகள் 09 நாட்கள் ஆக மொத்தம் 14 நாட்கள் விடுப்புகளை மனுதாரரின் விடுப்பு கணக்கு பட்டியலில் திரும்ப சேர்ப்பதோடு, 17.07.2020, 18.07.2020, 19.07.2020 மற்றும் 20.07.2020 ஆகிய தேதிகளில் (L) குறியீட்டை காண்பித்து பிடித்தம் செய்துள்ள 04 நாட்களுக்கு உண்டான ஊதியத்தை உடனே வழங்க வேண்டுமென கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்: 2

அரசு ஆணை எண். 163 போக்குவரத்து (சி1) துறை நாள்.21.05.1999–யை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்த மாநகர் போக்குவரத்து கழக செயல்முறை ஆணை எண். 16728/மவமே/மாபோக/99, நாள்.03.06.1999–ன் படி தொழிலாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு வழங்கும் போது "இந்த ஒரு மாத பணிக்காலத்தை கணக்கிடுவதற்கு அவருடைய வாரந்திர விடுமுறை, வார ஓய்வுநாள் (O) தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள் (H) விருப்ப பண்டிகை விடுப்பு (H) மற்றும் தற்செயல் விடுப்பு (C) ஆகியவை பணி நாட்களாக கருதப்படும் என்று செயல்முறை ஆணை எண்.16728/மவமே/மாபோக/99 நாள்.03.06.1999– ல் குறிப்பிடப்பட்டு உள்ளதனால் 25.03.2020 முதல் 31.12.2020 வரையிலான 282 நாட்களுக்குண்டான 23 நாட்கள் ஈட்டிய விடுப்பை மனுதார் திரு.கு.லெனின். நடத்துநர் (ப.எண்.54360) என்பவரின் ஈட்டிய விடுப்பு கணக்கில் சேர்க்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்: 3

கொரோனா ஊரடங்கு காலத்தில் மாநகர போக்குவரத்து கழக தண்டையார்பேட்டை–2 பணிமனையில் இருந்து இயக்கப்பட்ட சிறப்பு பேருந்துகளில் தொழிற்தாவாவில் சம்மந்தப்பட்ட தொழிலாளி பணி வழங்கக் கோரியும் பணி வழங்காமல் கடித எண்.43290/மசபபி/மா.போ.க/2020 நாள் 26.10.2020 மூலம் பேருந்து இயக்க முன்வரவில்லை என்று உண்மைக்கு மாறான தகவல்களை பதிவு செய்து உயர்திரு போக்குவரத்துச் செயலாளர் அவர்களை ஏமாற்றியுள்ள உயர்திரு.மா.போ.கழக முதுநிலை மேலாளர் (மவமே) என்பவருக்கு தண்டனை வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2 மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 205, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ1)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/564/2025.—மாநகர் போக்குவரத்து கழகம் என்ற நிர்வாகத்திற்கும் நேதாஜி டிரான்ஸ்போர்ட் ஓர்க்கர்ஸ் யூனியன் உறுப்பினரான திரு. M. வெங்கடேசன் என்பவருக்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 1, 2, (2 கோரிக்கைகள்) ஆகியவற்றை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

Verified by Republic

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்காணும் எழுவினாக்களுடன் சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினாக்கள்

கோரிக்கை எண்: 1

மனுதாரர் திரு. எம். வெங்கடேசன். நடத்துநர் (பணி எண்.சி55090) என்பவருக்கு நிர்வாகம் பிறப்பித்த செயல்முறை ஆணை எண் 29340/சபி(ஒந)2/மாபோக/2019. நாள் 18.09.2020 நாளிட்ட உத்தரவில் ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகள் தொடர்விளைவுடன் தள்ளி வைத்துள்ள தண்டனையை முற்றிலுமாக ரத்து செய்து அதற்கு உண்டான பணிதொடர்ச்சி மற்றும் பணப்பலன்களை உடனடியாக திருப்பி வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்: 2

மாநகர போக்குவரத்துக் கழக நிலையாணை விதிகளை தன்னிச்சையாக முடிவெடுத்து விசாரணைக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட திரு.எம். வெங்கடேசன், நடத்துநர் (பணி எண்.சி55090) என்பவருக்கு 01.04.2019 முதல் 30.04.2019 வரையிலான 30 நாட்களுக்கு அவரது கணக்கில் உள்ள விடுப்பாக கருத உத்தரவு பிறப்பித்திருப்பது மட்டுமல்லாமல் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கழிக்கப்பட்டு மீதம் உள்ள பாதி சம்பளத்தை வழங்காமல் இருப்பது முற்றிலும் தற்காலிக பணி (நிலையாணைகள்) சட்டம் 1946 எதிரானது என்றும், தொழிலகப் பணி (நிலையாணைகள்) சட்டம் 1946–க்கு எதிராக பிடித்தம் செய்துள்ள தொழிற்தாவாவில் சம்பந்தப்பட்ட தொழிலாளியின் ஈட்டிய விடுப்பு 30 நாட்களை உடனடியாக திரும்ப அவரது விடுப்பு பட்டியலில் சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், வழங்கப்படாமல் இருக்கும் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கழிக்கப்பட்டு மீதம் உள்ள தொகையை வழங்கவேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை.

[அரசாணை (டி) எண் 203, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ1)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/565/2025.—அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை என்ற நிர்வாகத்திற்கும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அண்டு ஜெனரல் ஒர்க்ர்ஸ் யூனியனுக்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கையை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன், சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 2017–2018 ஆண்டிற்கு 20 சதவீதம் போனசும். 2015–2016. 2016–2017 ஆண்டுகளில் வழங்க வேண்டிய நிலுவைத்தொகைளையும் நிர்வாகம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 260, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ1)த் துறை, 13 மே 2025, சித்திரை 30, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/566/2025.—அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை என்ற நிர்வாகத்திற்கும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் அண்டு ஜெனரல் ஒர்க்ர்ஸ் யூனியனுக்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கைகளை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாக்களுடன், சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்

எழுவினாக்கள்

கோரிக்கை எண்.1

நிறுவனத்தில், 240 நாட்கள் பணியாற்றிய அனைத்து தொழிலாளர்களையும் பணிநிரந்தரம் செய்து உச்சநீதிமன்ற தீர்ப்பின் மூலம் எடுத்துகாட்டிய குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ.18,000/–நிர்ணயம் செய்திடவும், ஆண்டு ஊதிய ஊயர்வு ரூ.1000/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.2

1960–ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட விலைவாசிப்புள்ளி அடிப்படையில், புள்ளி ஒன்றுக்கு ரூ.1/– வீதம் கணக்கிட்டு பஞ்சப்படி வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.3

ஈட்டிய விடுப்பு மாதத்திற்கு 15 நாட்களுக்கு ஒரு நாள் வீதமும், தற்செயல் விடுப்பு ஆண்டுக்கு தலா 15 நாட்கள் வீதமும், மருத்துவ விடுப்பு ஆண்டுக்கு தலா 15 நாட்கள் வீதமும், தேசிய மற்றும் பண்டிகை கால விடுப்புகள் ஆண்டுக்கு

Vanrie Q Reallstre

15 நாட்கள் வீதமும் சம்பளத்துடன் வழங்க வேண்டும் என்றும், மாதத்தில் 4 நாட்கள் வார விடுமுறை நாட்களாக அறிவிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தான? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.4

வீட்டு வாடகைப்படியாக மாதம் தலா ரூ.2000/– வீதம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.5

போக்குவரத்துப்படியாக மாதம் தலா ரூ.1000/– மற்றும் நகர ஈட்டுப்படியாக மாதம் தலா ரூ. 1500/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா ? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்

கோரிக்கை எண்.6

தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில ஆண்டுக்கு தலா இரண்டு மாத ஊதியம் கல்விப்படியாக வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.7

அனைத்து தொழிலாளர்களுக்கும் பண்டிகை கால முன்பணம் 10 சமகால தவணையில் பிடித்தம் செய்யும் வகையில் தலா ஒரு மாத ஊதியம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.8

தொழிலாளியோ அல்லது குடும்பத்தினரோ அகால மரணம் அடையும்போது தலா ஒரு மாத ஊதியம் ஈமச்சடங்கு உதவித்தொகையாக வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.9

நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தலா இரண்டு வேளை தேநீர் இலவசமாக வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.10

மாதம் 3 முறை 1 மணி நேரம் பணியின் போது சம்பளத்துடன் கூடிய அனுமதியும், காலதாமதம் மாதம் தலா 3 முறையும் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

SWOP இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்., திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

[அரசாணை (டி) எண் 223, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/567/2025.—SWOP இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட். திருப்பெரும்புதூர் என்ற நிர்வாகத்திற்கும் பொது தொழிலாளர் சங்கம் (CITU), திருப்பெரும்புதூர் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிந்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 1, 2, (2 கோரிக்கைகள்) ஆகியவற்றை காஞ்சிபுரம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்,

1917–ஆம் ஆண்டு தொழில்தகராறுகள் சட்டத்தின் மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு. இத்தகராறை கீழ்காணும் எழுவினாக்களுடன் காஞ்சிபுரம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினாக்கள்

கோரிக்கை எண்: 1

தொழிலாளர்களுக்கு 2023, 2024, 2025 ஆகிய ஆண்டுகளுக்கு மொத்த சம்பள உயர்வாக ரூ.24,000/– அளிக்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம், எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.2

இரவு பணியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஷிப்ட் அலவன்ஸாக ரூ.150/–வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம். எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வினோ மெக்கானிக் பிரைவேட் லிமிடெட்

[அரசாணை (டி) எண் 227, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/568/2025.—வினோ மெக்கானிக் பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் வினோ மெக்கானிக் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை 1, 2, 3, 4, 5, 6, 7, 11 மற்றும் 12 (9 கோரிக்கைகள்) ஆகியவற்றை சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்,

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்காணும் எழுவினாக்களுடன் சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்

Verified e-Gazette

எழுவினாக்கள்

கோரிக்கை எண்: 1 அடிப்படைச் சம்பளம் : (basic pay)

தொழிலாளர்களுக்கு. 31.03.2024 தேதியில் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 40% தொகையை உயர்த்தி ஏற்கனவே பெற்று வரும் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து கணக்கிட்டு 01.04.2024 முதல் புதிய அடிப்படைச் சம்பளமாக நிர்ணயம் செய்து வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை -2 பணிமூப்புத் தொகை (SERVICE WEIGHTAGE)

தொழிலாளர்களின் பணிமூப்பையும் (Seniority) அனுபவத்தையும் (Experience) அங்கீகரிக்கும் வகையிலும் தொழிலாளர்களது சம்பளத்தின் வித்தியாசத்தை நிலை நிறுத்தும் வகையிலும் கீழ்க்குறிப்பிட்டவாறு பணி மூப்புத் தொகை (SERVICE WEIGHTAGE) நிர்ணயித்து வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 3 அகவிலைப்படி (DEARNESS ALLOWANCE)

அடிப்படையாண்டு 2010=100 என்பதைப் பின்பற்றி 2023 ஆம் ஆண்டின் சராசரி புள்ளியில் 161 புள்ளிகளை சமன் செய்தது போக மீதமுள்ள புள்ளிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு புள்ளிக்கு ரூ.100 வீதம் கணக்கிட்டு வரும் தொகையை நிரந்தர அகவிலைப்படியாக 01.04.2024 முதல் வழங்குவதுடன் 01.04.2025, 01.04.2026 ஆகிய தேதிகளுக்கு முந்தைய ஆண்டின் சராசரியில் 161–க்கு மேல் உயரும் புள்ளிகளுக்கு ஒரு புள்ளிக்கு ரூ.125/– வீதம் கணக்கிட்டு வரும் தொகையை மாறிவரும் அகவிலைப்படியாக (Variable DA) வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 4 வருடாந்திர ஊதிய உயர்வு (ANNUAL INCREMENT)

தொழிலாளர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வை 01.04.2025, 01.04.2026 ஆகிய தேதிகளில் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

வ. எண்	பதவி/பொறுப்புகள் விவரம்	ஊதிய உயர்வு விவரம்	
		01.04.2025	01.04.2026
1.	ஜீனியர் எக்ஸிகியூட்டிவ்	1000	1500
2.	ஜீனியர் இன்ஜினியர்	1000	1500
3.	சீனியர் ஃபோர்மேன்	1000	1500
4.	ஃபோர்மேன்	850	1250
5.	சீனியர் டெக்னீசியன் கிரேடு–1	850	1250
6.	சீனியர் டெக்னீசியன் கிரேடு–2	800	1250
7.	சீனியர் டெக்னீசியன் கிரேடு–3	750	1100
8.	டெக்னீசியன் கிரேடு –1	700	1000
9.	டெக்னீசியன் கிரேடு–2	700	1000
10.	டெக்னீசியன் கிரேடு –3	700	1000

கோரிக்கை எண். 5 வீட்டு வாடகைப்படி (HOUSE RENT ALLOWANCE)

தற்போது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வாடகைப்படியில் 40% தொகையை உயர்த்தி புதிய வீட்டு வாடகைப்படியாக ரூ.7.,000/– வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 6 போக்குவரத்துப்படி (CONVEYANCE ALLOWANCE)

தற்போது வழங்கப்படும் போக்குவரத்துப்படி மிக குறைவாக உள்ளது என்றும். எனவே, போக்குவரத்துப்படியை 01.04.2024 முதல் ரூ.3,000/– 01.04.2025 முதல் ரூ.4,000/–மும் மற்றும் 01.04.2026 முதல் ரூ.5.000/–என உயர்த்தி நிர்ணயம் செய்து மாதந்தோறும் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 7 வருகை ஊக்கப்படி (ATTENDANCE INCENTIVE)

தற்போது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வருகை ஊக்கப்படியை உயர்த்தி மாதத்தில் அனைத்து வேலை நாட்களிலும் பணிக்கு வருபவர்களுக்கு ரூ.1,500/–ம் மாதத்தில் ஒரு நாள் விடுப்பு எடுப்பவர்களுக்கு ரூ.1,250/–ம் மாதத்தில் இரண்டு நாள் விடுப்பு எடுப்பவர்களுக்கு ரூ.1,000/– வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 11 சீருடைகள் (UNIFORMS)

தொழிலாளர்களுக்கு வருடந்தோறும் 4 ஜோடிகள் தரமான சீருடைகள் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 12 தையற்கூலி (STICHING CHARGES)

சீருடைகளை தைப்பதற்கு கீழ்கண்டவாறு தையற்கூலி வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

i. 2024 ஆம் ஆண்டு ஒரு ஜோடிக்கு – ரூ.1000/–

ii. 2025 ஆம் ஆண்டு ஒரு ஜோடிக்கு – ரூ.1200/–

iii. 2026 ஆம் ஆண்டு ஒரு ஜோடிக்கு – ரூ.1500/–

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி, செம்மஞ்சேரி, சென்னை.

[அரசாணை (டி) எண் 229, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/569/2025.—செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி, செம்மஞ்சேரி சென்னை நிர்வாகத்திற்கும் இன்ஜினியரிங் எல்க்ட்ரானிக்ஸ் & ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியனுக்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

Verified by TNGovtGazette

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 1 முதல் 8 (8 கோரிக்கைகள்) ஆகியவற்றை காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்,

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன தகராறு, காஞ்சிபுரம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினாக்கள்

கோரிக்கை எண்.1

தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் ரூ.6000/– ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.2

பணிபுரியும் தொழிலாளர்களை 20 வருடம் அதற்கு மேல் கிரேடு–1, 11 வருடம் முதல் 20 வரை கிரேடு–2, 6 முதல் 10 வருடம் வரை கிரேடு–3 மற்றும் 1 முதல் 5 வருடம் வரை ஹெல்பர் என்று தரம் பிரித்து கீழ் குறிப்பிட்டுள்ள கிரேடின்படி அடிப்படை சம்பளம் மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கிரேடு 1 – 20000–600–23000–800–27000–1000–32000–1200–38000–1400–45000–1600

கிரேடு 2 – 17000–500–20000–650–23250–800–27250–950–32000–1100–37500–1250

கிரேடு 3 – 14000–400–16000–500–18500–600–21500–700–25000–800–29000–900

ஹெல்பர் 4 – 12000–300–13500–375–15375–450–17625–525–20250–600–23250–675

கோரிக்கை எண். 3

தொழிலாளர்களுக்கு நிலையான பஞ்சப்படியாக ரூ.8000/– அளிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 4

தொழிலாளர்களுக்கு மாறும் அகவிலைப்படியாக 1982 ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்ட 400 புள்ளிக்கு மேல் ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ.8/–அளிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 5

தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படியாக ரூ.1000/– அளிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 6

தொழிலாளர்களுக்கு சலவைப்படியாக ரூ.1000/– அளிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 7

தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 3 ஹமாம் சோப், 2 வாஷிங் சோப், தேங்காய் எண்ணெய் 1/4 கிலோ, டூத்பேஸ்ட் 200 கிராம் மற்றும் ஒரு டவல் அளிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 8

தொழிலாளர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஒரு மழைகோட் அளிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு காஞ்சிபுரம். தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஹோண்டா கார்ஸ் இந்தியா லிமிடெட், மீக்கோ (Meiko) லாஜிஸ்டிக்ஸ் இந்தியா பிரைவேட் லிட் மற்றும் அரவிந்த் அசோசியேட்ஸ்

[அரசாணை (டி) எண் 231, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/570/2025.—ஹோண்டா கார்ஸ் இந்தியா லிமிடெட், மீக்கோ (Meiko) லாஜிஸ்டிக்ஸ் இந்தியா பிரைவேட் லிட் மற்றும் அரவிந்த் அசோசியேட்ஸ் நிர்வாகங்களுக்கும் ஊத்துக்கோட்டை வட்டார அமைப்புசாரா மற்றும் பொது தொழிலாளர்கள் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கையை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை பின்வரும் எழுவினாக்களுடன் சென்னை. தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

தொழிலாளர்களின் 2021–2022 ஆம் ஆண்டிற்கு 20 சதவீத போனஸ் அளித்திட வேண்டுமென கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பெஸ்ட் கேஸ்ட் ஐடி லிமிடெட்

[அரசாணை (டி) எண் 232, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/571/2025.—பெஸ்ட் கேஸ்ட் ஐடி லிமிடெட் நிர்வாகத்திற்கும் ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு என்பவருக்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 9(a), 10, 11, 12(a)&(c), 17, 19, 20, 21(b) 29 (16 கோரிக்கைகள்) ஆகியவற்றை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்,

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினாக்கள்

கோரிக்கை எண்.1

தற்போது தொழிலாளர்கள் கடந்த ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெற்று வரும் ரூ.12,375/– முதல் ரூ.21,521/– வரையிலான அடிப்படை ஊதியத்துடன் மேலும் ரூ.5,000/– உயர்த்தி அளிக்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.2

கடந்த ஒப்பந்தத்தின் போது முன்வைக்கப்பட்டு அடுத்த ஒப்பந்தத்தின் போது வழங்குவதாக ஒப்புக்கொண்டவாறு பஞ்சப்படியை கீழ்கண்டவாறு அளிக்க வேண்டும்.

a) நிலையான பஞ்சப்படி

சென்னை, தொழிலகத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைவாசி குறியீட்டு எண்.1, அடிப்படை ஆண்டு 2001=100 கணக்கீட்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு வரும் புள்ளிகளில் 2021 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மொத்த புள்ளிகளின் சராசரியை கணக்கில் கொண்டு முதல் 100 புள்ளிகளை சமநிலைப்படுத்தி, அதை நிலையான பஞ்சப்படிக்கான அடிப்படையாகக் கொண்டு மாதம் ரூ.2,500/– ஐ நிலையான பஞ்சப்படியாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வழங்க வேண்டும் என்றும்.

b) மாறுகின்ற பஞ்சப்படி

சென்னை, தொழிலகத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைவாசி குறியீட்டு எண் 1. அடிப்படை ஆண்டு 2001=100 கணக்கீட்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு வரும் புள்ளிகளில் 2021 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மொத்த புள்ளிகளின் சராசரியை கணக்கில் கொண்டு முதல் 100 புள்ளிகளுக்கு மேல் உயர்ந்து வரும் ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ.25/– என நிர்ணயம் செய்து மாறுகின்ற பஞ்சப்படியாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வழங்க வேண்டும் என்றும், மேலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாறுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் இதை மாற்றம் செய்து அளிக்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் நியாயமானது தானா?

2021 ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரம்

ஜனவரி/டிசம்பர் வரையிலான மொத்த புள்ளிகள்	=	3676
மொத்த புள்ளிகளின் சராசரி	=	3676/12=306.33
சமநிலைப்படுத்தப்பட்ட புள்ளிகள்	=	100
மீதமுள்ள VDA கணக்கீட்டு புள்ளிகள்	=	206.33
புள்ளி ஒன்றிற்கு கோரும் தொகை	=	ரூ.25/–
மாதம் கோரும் VDA	=	206.33x25=5158/–

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 3

தற்போது வழங்கப்பட்டு வரும் வீட்டு வாடகைப்படியான ரூ.3,536/– முதல் ரூ.6.149/– வரையிலான தொகையுடன் மேலும் ரூ.1000/–ம் உயர்த்தி வீட்டு வாடகைப்படியாக வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 4

தற்போது வழங்கப்பட்டு வரும் சலவைப்படி ரூ.50/– உடன் மேலும் ரூ.450/–சேர்த்து இனி மாதம் ரூ.500/– சலவைப்படி வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 5

தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.1,768/– முதல் ரூ.3,074/– வரையிலான இதரப்படியுடன் மேலும் ரூ.1,000/–ம் உயர்த்தி வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 6

இதுவரை வழங்கப்படாத கன்வேயன்ஸ் அலவன்ஸ் இனி வழங்கப்பட்டு மாதம் ரூ.2000/–ம் வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 7

தற்போது அனைத்து தொழிலாளர்களுக்கும் விநியோக ஊக்கத் தொகை 150 டன் விநியோகம் செய்தால் ரூ.500/– என்றும், 150 டன்னுக்கு மேல் ஒவ்வொரு 5 டன்னுக்கும் ரூ.100/– என்றும், மாதந்தோறும் வழங்கப்பட்டு வருவதை மாற்றி இனி 1 டன் விநியோகம் செய்தால் ரூ.20/– என கணக்கிட்டு விநியோகம் செய்யப்படும் மொத்த டன்னுக்கு ஏற்ப விநியோக ஊக்கத் தொகை அனைத்து தொழிலாளர்களுக்கும் மாதந்தோறும் வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 9

தற்போது அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் பயணப்படி ரூ.1000/– உடன் மேலும் ரூ.500/– சேர்த்து இனி ரூ.1500/– வீதம் பயணப்படியாக வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் இப்பகுதி கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

Verified by Republic TM

கோரிக்கை எண். 10

இதுவரை வழங்கப்படாத ஷிப்ட் அலவன்ஸ் இனி இரண்டாம் ஷிப்ட் ஒன்றுக்கு ரூ.50/– வீதமும் இரவு முழு ஷிப்ட் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.100/–வீதமும் வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.11

தொழிற்சாலையில் அதிக வெப்பத்தில் தொழிலாளர்கள் பணி செய்து வருவதால், இதுவரை வழங்கப்படாத வெப்பப்படி, இனி வழங்கப்பட்டு மாதம் ரூ.1000/–ம் அனைத்து தொழிலாளர்களுக்கும் வெப்பப்படியாக வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 12

a) தற்போது வழங்கப்பட்டு வரும் ஸ்நாக்ஸ் 25 கிராம் என்பதை இனி 100 கிராம் ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும், b) இரவு ஷிப்டில் வழங்கப்படும் பிஸ்கட் அளவு 35.5 கிராம் என்பதை இனி 100 கிராமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும். c) இரவு ஷிப்டில் இதுவரை வழங்கப்படாத வாழைப்பழம் இனி வழங்கப்பட்டு இரவு ஷிப்ட் ஒன்றிற்கு நான்கு வாழைப்பழம் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 17

இதுவரை வழங்கப்படாத கல்வி உதவித் தொகையானது இனி வருடத்திற்கு ஒருமுறை அனைத்து தொழிலாளர்களுக்கும் மே மாத ஊதியத்துடன் ரூ.10,000/–கல்வி உதவித் தொகையாக வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 19

இதுவரை வழங்கப்படாத பொங்கல் பண்டிகை பரிசு தொகையானது இனி அனைத்து நிரந்தர தொழிலாளர்களுக்கும் பொங்கல் பண்டிகை பரிசு தொகையாக டிசம்பர் மாத ஊதியத்துடன் ரூ.5,000/–ம் ஆண்டு தோறும் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 20

இதுவரை வழங்கப்படாத ஆயுதபூஜை பரிசுத் தொகை இனி ஆயுதபூஜையன்று பரிசுத் தொகையாக ரூ.5,000/– மதிப்பிலான கிஃப்ட் பொருள் வழங்க வேண்டும் என்றும், அத்துடன் ஒரு கிலோ ஸ்வீட், அரைகிலோ காரம், ஒரு டசன் சாத்துக்குடி. ஒரு டசன் வாழைப்பழம் மற்றும் பொரிகடலை வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 21

தற்போது வழங்கப்பட்டு வரும் வார்பட் மற்றும் அலாய் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு 200 கிராம் ஹமாம் சோப் என்பதை மாற்றி இனி 300 கிராம் என உயர்த்தி அனைத்து துறையிலுள்ள தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண். 29

ஒப்பந்தம் காலாவதியான 31.12.2021 தேதியிலிருந்து ஊதிய உயர்வு நிர்ணயம் செய்யும் வரை இடைக்கால நிவாரணமாக ஒவ்வொரு மாதமும் தற்காலிக ஊதிய உயர்வாக தற்போது வழங்கப்படும் மாத ஊதியத்துடன் மேலும், ரூ.10,000/–ம் இடைக்கால நிவாரணமாக அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்றும். இக்கோரிக்கைகள் தவிர ஏற்கனவே நடைமுறையில் உள்ள சலுகைகள் அனைத்தும் தொடர்ந்து வழங்கப்படவேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மதர்சன் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜிஸ் அண்டு இன்ஜினியரிங், காஞ்சிபுரம்

[அரசாணை (டி) எண் 234, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 8 மே 2025, சித்திரை 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/572/2025.—மதர்சன் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜிஸ் அண்டு இன்ஜினியரிங் என்ற நிர்வாகத்திற்கும் உழைப்போர் உரிமை இயக்கத்திற்கும் இடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கையை காஞ்சிபுரம். தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்:

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன், காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு. எம். தியாகராஜன் என்பவரை பழிவாங்கும் நோக்கில் 30 நாட்கள் பணியிடை நீக்கம் செய்து நிர்வாகத்தால் வழங்கப்பட்ட தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம். தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், விழுப்புரம், 2) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், காஞ்சிபுரம் மண்டலம், காஞ்சிபுரம் மாவட்டம்

[அரசாணை (டி) எண் 268, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 28 மே 2025, வைகாசி 14, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

Verified Report

No.II(2)/LWSD/573/2025.—நிர்வாகம், 1). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், விழுப்புரம், 2) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், காஞ்சிபுரம் மண்டலம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகிய நிர்வாகங்களுக்கும் அரசு போக்குவரத்து கழக மனித உரிமைகள் தொழிற்சங்கத்திற்கும் இடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கையை காஞ்சிபுரம். தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன், காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு. S. ஏழுமலை, நடத்துநர் (பணி எண். 63017) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை 3 வருட காலத்திற்கு நிரந்தரமாக தள்ளி வைத்து நிர்வாகம் பிறப்பித்த கு.எண். 41/4541/ச6/தஅபோக(வி)/கா.ம/2015, நாள் 28.03.2016 என்ற உத்தரவினை இரத்து செய்து அதனால் கிடைக்கக் கூடிய பணிப்பணப்பலன்களையும், சலுகைகளையும் மனுதாரருக்கு வழங்கிட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 270, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 28 மே 2025, வைகாசி 14, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/574/2025.—நிர்வாகம், 1) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட் விழுப்புரம், 2) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், காஞ்சிபுரம் மண்டலம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும் அரசு போக்குவரத்து கழக மனித உரிமைகள் தொழிற்சங்கத்திற்கும் இடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கோரிக்கையை காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன், காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு. D. ராஜி, நடத்துநர் (பணி எண்.63873) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை இரண்டு வருட காலத்திற்கு நிரந்தரமாக தள்ளி வைத்து நிர்வாகம் பிறப்பித்த கு.எண்.132/ச12/தஅபோக (வி)/கா.ம/2020, நாள்.02.02.2021 என்ற உத்தரவினை இரத்து செய்து அதனால் கிடைக்கக் கூடிய பணிப்பணப்பலன்களையும். சலுகைகளையும் மனுதாரருக்கு வழங்கிட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது

ஜம்போ பேக் லிமிடெட் திருவள்ளூர்

[அரசாணை (டி) எண் 271, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2)த் துறை, 28 மே 2025, வைகாசி 14, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/575/2025.—திருவள்ளூர் மாவட்டம், ஜம்போ பேக் லிமிடெட் நிர்வாகத்திற்கும் சென்னை உழைப்போர் உரிமை இயக்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறில் உள்ள கீழ்க்காணும் கோரிக்கை எண்கள் 2, 3 (2 கோரிக்கைகள்) ஆகியவற்றை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்:

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(C), பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன தகராறு. சென்னை. தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினாக்கள்

கோரிக்கை எண்.2

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், மனுதாரர் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கும் 2022–2023 ஆம் ஆண்டிற்கான போனஸ் 20% மற்றும் கருணைத் தொகை ரூ.10,000 வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

கோரிக்கை எண்.3

2023–ம் ஆண்டு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட செயல்திறன் ஊக்கத்தொகையை அனைவரிடமும் கூடி பரிசீலிக்காமல் நிர்வாகம் ஒப்பந்தத்தை மீறி செயல்பட்டதால் பல தொழிலாளர்களுக்கு நீண்ட பொருளாதார இழப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும். எனவே 03.09.2021 தேதியிட்ட 18(1) ஒப்பந்தத்தின் 14 வது சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் செயல்திறன் ஊக்கத்தொகை ரூ.1000/– த்தை பாரபட்சமின்றி உரிய முறையில் பரிசீலனை செய்து அனைத்து தொழிலாளர்களும் பலன் பெறும் வகையில் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

Untied Publishers

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட் கோயம்புத்தூர்

[அரசாணை (டி) எண் 308, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/576/2025.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிருவாகத்திற்கும், நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம் கோயம்புத்தூர், என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்: 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு T. ஜெகதீஸ்வரன், ஓட்டுநர் (ப.எண்.C.28864) என்பவருக்கு பணிவரன்முறையை 6 மாத காலத்திற்கு தள்ளிவைத்து நிருவாகம் பிறப்பித்த 13.12.2019 நாளிட்ட உத்தரவினை இரத்து செய்து, பணிவரன்முறையை உரிய காலத்தில் வழங்கி அதற்கான பணபலன்களை வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 309, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/577/2025.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிருவாகத்திற்கும். தமிழ்நாடு அரசு போக்குவரத்து சீருடை பணியாளர் தொழிற்சங்கம், கோயம்புத்தூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்; 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு P. அருண்குமார், ஓட்டுநர் (பணி எண்.C.27752) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வை இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து நிருவாகம் பிறப்பித்த 31.10.2019 நாளிட்ட உத்தரவை இரத்து செய்தும், காலதாமதமாக வழங்கப்பட்ட முதலாம் ஆய்வுப்பலனை உரிய காலத்தில் கணக்கிட்டு வழங்கிடவும் மற்றும் தற்காலிக பணி நீக்கத்திலிருந்த 31.01.2018 முதல் 01.03.2018 வரையிலான 30 நாட்களை நிலுவையிலுள்ள விடுப்பு நாட்களைப் பொறுத்து விடுப்பாக கருதி பிறப்பித்த உத்தரவை இரத்து செய்து அதனால் கிடைக்கக்கூடிய பணப்பலன்களை மனுதாரருக்கு வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 310, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/578/2025.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிருவாகத்திற்கு தமிழ்நாடு போக்குவரத்து பொது தொழிற்சங்கம், ஈரோடு என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாக்களுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்; 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாக்களுடன் சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா -1

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர் (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகம் பிறப்பித்த 18.04.2017 நாளிட்ட உத்தரவை முற்றிலும் நீக்கறவு செய்து அபராதமாக பிடித்தம் செய்யப்பட்ட ரூ.100/–ஐ 18 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

எழுவினா -2

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர் (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகம் பிறப்பித்த 05.04.2017 நாளிட்ட உத்தரவில் மனுதாரர் மீது கடும் நடவடிக்கை எடுக்கலாமெனினும், நிருவாகம் மனுதாரர் மீது கருணை கொண்டு இம்முறை மனுதாரரை கடுமையாக எச்சரிக்கப்படுகிறது என உத்தரவிட்டதை முற்றிலும் நீக்கறவு செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

Verified Report

எழுவினா -3

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர் (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகம் பிறப்பித்த 05.04.2017 நாளிட்ட உத்தரவை முற்றிலும் நீக்கறவு செய்து அயராதமாக பிடித்தம் செய்யப்பட்ட ரூ.100/–ஐ 18 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

எழுவினா -4

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர் (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகம் பிறப்பித்த 27.02.2022 நாளிட்ட உத்தரவினை முற்றிலும் நீக்கறவு செய்து மூன்று மாதங்கள் பின்தொடர்ச்சியின்றி தள்ளி வைக்கப்பட்டு தண்டனை அடிப்படையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையை 18 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

எழுவினா -5

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர் (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகம் பிறப்பித்த 22.09.2021 நாளிட்ட உத்தரவினை முற்றிலும் நீக்கறவு செய்து அபராதமாக பிடித்தம் செய்யப்பட்ட ரூ.231/–ஐ 18 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

எழுவினா -6

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர். (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகத்தால் 15 மாதங்கள் கால தாமதமாக வழங்கப்பட்ட முதலாம் ஆய்வுப்பலனுக்குண்டான பின்னீட்டுத்தொகையை 18 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தாண? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

எழுவினா -7

திரு M. ஜெயக்குமார் ஓட்டுநர், (ப.எண்.சி40776) என்பவருக்கு நிருவாகத்தால் 31 மாதங்கள் கால தாமதமாக வழங்கப்பட்ட இரண்டாம் ஆய்வுப்பலனுக்குண்டான பின்னீட்டுத்தொகையை 18 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு சேலம். தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 311, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/579/2025.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிருவாகத்திற்கும். தமிழ்நாடு அரசு போக்குவரத்து சீருடை பணியாளர் தொழிற்சங்கம், கோயம்புத்தூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்: 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு K. நாகேஸ்வரன். தொழில் வினைஞர். தலைமையகக் கிளை (ப.எண்.12297) என்பவருக்கு தற்பொழுது பெற்று வரும் அடிப்படை ஊதியத்தில் இரண்டு நிலைகள் நிரந்தரமாக குறைத்து நிருவாகம் பிறப்பித்த 24.06.2023 நாளிட்ட உத்தரவை இரத்து செய்து அதனால் மனுதாரருக்கு கிடைக்கவேண்டிய அனைத்து சட்டப்படியான பலன்களை வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 312, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/580/2025.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட். கோயம்புத்தூர் என்ற நிருவாகத்திற்கும். நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம். கோயம்புத்தூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்: 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு R. கணேசன். ஓட்டுநர் (ப.எண்.சி23460) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைத்தது மற்றும் தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த 07.11.2018 முதல் 06.12.2018 வரையுள்ள 30 நாட்களை அவரது விடுப்பு கணக்கில் நிலுவையிலுள்ள விடுப்பு நாட்களை பொறுத்து விடுப்பாக கருதி, நிருவாகம் பிறப்பித்த 24.10.2020 நாளிட்ட உத்தரவினை இரத்து செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள்

Verified RegEstate

தீர்வு அளிக்குமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[அரசாணை (டி) எண் 314, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/581/2025.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிருவாகத்திற்கும், நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம், கோயம்புத்தூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்; 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

திரு T. ஜெகதீஸ்வரன், ஓட்டுநர் (ப.எண்.C.28864) என்பவருக்கு பணிவரன்முறையை 2 வருடம் தள்ளி வைத்து நிருவாகம் பிறப்பித்த 08.10.2018 நாளிட்ட உத்தரவை இரத்து செய்து பணிவரன் முறையை முன் தேதியிட்டு வழங்கி அதற்கான பணபலன்கள் வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்(டாஸ்மாக்), ஈரோடு

[அரசாணை (டி) எண் 313, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, 4 ஜூன் 2025, வைகாசி 21, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No.II(2)/LWSD/582/2025.—மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்), ஈரோடு என்ற நிருவாகத்திற்கும், ஈரோடு மாவட்ட டாஸ்மாக் ஊழியர் சங்கம், ஈரோடு (சிஐடியு) என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது, என்று அரசு கருதுவதாலும்; மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்; 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இத்தகராறை கீழ்க்காணும் எழுவினாவுடன் சேலம், நொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா -1

திரு M. வெங்கடேசன். உதவி விற்பனையாளர் என்பவருக்கு. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், ஈரோடு மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியரின் 14.02.2022 நாளிட்டு வழங்கப்பட்ட தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா ? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு அளிக்குமாறு சேலம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கொ. வீர ராகவ ராவ்,
அரசுச் செயலாளர்.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU